(9)	2021 ஆம் ஆண்டுக்காக 2021 ஆம் ஆண்டினுள் கிடைத்த மீள்நிரப்பல்களின் மொத்தம்	இல்லை
(10)	2021 டிசம்பர் 31ஆம் திகதியன்று மிகைக்கணிப்பு மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம் (03+04+05) -(06+07) - (08+09)	இல்லை
(11)	முதன்மட்டுக் கணக்குகளைத் தயாரித்து முடிவடைந்த திகதி வரை 2021 ஆம் ஆண்டு சம்பந்தமாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம்	இல்லை
(12)	முதன்மட்டுக் கணக்குகளைத் தயாரித்து முடிவடைந்த திகதி வரை 2021 டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் கிடைத்த மீள்நிரப்பல்களின் மொத்தம்	இல்லை
(13)	முதன்மட்டுக் கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட திகதியின்பின்ன கிடைக்கவிருந்த மீள்நிரப்பல் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உரிமைக் கோரல்களின் மொத்தம்	இல்லை

(10+11-12)

(பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி))

திகதி :18.02.2022

ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

குறிப்பு-(vii)

காணாமல்போன வவுச்சர் பற்றிய கூற்று

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் மன்னார்

செலவினத் தலைப்பு இல: 265

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் 01

திகதி	வவுச்சர் இலக்கம்	பெறுபவரின் பெயர்	கொடுப்பனவின் தன்மை	தொகை (ரூபா)

(பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி))

திகதி :18.02.2022

ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

குறிப்பு (viii)

10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இல் (1) ன் அறிவுரைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்குகள் பற்றிய 2021.12.31ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

செலவினத் தலைப்பு இல: 265 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

தொடர் இல.	வங்கியின் பெயர்	கணக்கு இலக்கம்	2021.12.31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி	2021.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி	2021.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்)	இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம்
			(ரூபா.)	(ரூபா.)		
1	இலங்கை வங்கி தற்றேன்	0007041949	-	-		2021 December
2	இலங்கை வங்கி மன்னார்	0007041952	33,745,609	-		2021 December
3	இலங்கை வங்கி மன்னார்	0007041958	50,678,868	-		2021 December
4	இலங்கை வங்கி மன்னார்	0007041959	26,207,842	-		2021 December
5	இலங்கை வங்கி மன்னார்	0007041960	40,118,981	-		2021 December
6	இலங்கை வங்கி மன்னார்	0007041961	26,809,376	-	2,279	2021 December
7	இலங்கை வங்கி மன்னார்	0007041964	28,839,774	-		2021 December
			206,400,450	-	**2,279**	

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி 18.02.2022

ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
1003.07.02	பதிவாளர் நாயகம் திணைக்களம் தொடர்பிலான பதிவுக் கட்டணங்கள்	-	-	4,339,880	-
1003.07.03	தனியார் மரப் போக்குவரத்து	-	-	41,439	-
1003.07.05	பாதுகாப்ப அமைச்சு தொடர்பான அனுமதிப்பத்திர வரி	1,200	1,200	5,350	445.83
1003.07.99	ஏனையவை	125,000	50,000	134,951	269.90
2002.01.01	அரச கட்டடங்கள் மற்றும் வீடுகள் மீதான வாடகை	2,950,000	1,935,000	2,173,026	112.30
2002.01.03	காணி மற்றும் ஏனையவற்றிலிருந்து வாடகை	-	-	88,980	-
2002.02.99	பிற வட்டி	2,271,200	2,271,200	2,725,374	120.00
2003.02.13	பரீட்சைகள் மற்றும் ஏனைய கட்டணங்கள்	-	-	98,250	-
2003.02.14	மோட்டார் கோக்குவரத்துச் சட்டத்தின் கீழான கட்டணங்களும் ஏனைய பெறுகைகளும்	-	-	12,282,005	-
2003.02.03	1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழான கட்டணம்	-	-	970,450	-
2003.02.06	பினோரா மற்றும் புளொரா பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டணம்	-	-	175,070	-
2003.02.99	நானாவித வருமானங்கள்	40,000	200,000	140,060	70.03
2003.99.00	ஏனைய பெறுகைகள்	4,359,000	17,500,000	20,438,731	116.79
2004.01.00	சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு மத்திய அரசாங்கம்	-	-	14,569,532	-
2006.02.02	மூலதனச் சொத்துக்களின் விற்பனை	150,000	160,000	714,695	446.68
மொத்தம்				**58,897,793**	

3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவீனம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும் செலவினம்				
ஆளுக்குரிய வேதனங்கள்				
1001 - சம்பளமும் கூலியும்	152,000,000	155,600,000	153,588,145	98.71
1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	6,400,000	6,400,000	5,600,201	87.50
1003 - ஏனைய கொடுப்பனவுகள்	59,500,000	55,900,000	53,370,313	95.47
பிரையாணச் செலவினம்	0	0	0	
1101 - உள்ளூர்	4,900,000	4,300,000	2,915,808	67.81
வழங்கல்கள்	0	0	0	
1201 - எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்	6,300,000	6,570,000	6,011,624	91.50
1202 - எரிபொருள்	6,400,000	5,700,000	4,898,001	85.93
1203 - உணவும் சீருடைகளும்	1,000,000	850,000	703,337	82.75
1205 - ஏனையவை	1,100,000	1,450,000	1,018,932	70.27
பராமரிப்புச் செலவினங்கள்	0	0	0	
1301 - வாகனங்கள்	9,000,000	9,000,000	5,867,423	65.19
1302 - பொறி, இயந்திரம், உபகரணம்	2,700,000	3,060,000	2,884,847	94.28
1303 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	4,200,000	5,200,000	2,455,025	47.21
சேவைகள்	0	0	0	
1401 - போக்குவரத்து	1,550,000	1,550,000	1,180,742	76.18
1402 - தபால், தொலைத்தொடர்பு	3,900,000	4,700,000	3,954,733	84.14
1403 - மின்சாரமும் நீரும்	7,200,000	6,400,000	4,787,968	74.81
1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	600,000	830,000	825,723	99.48
1409 ஏனையவை	17,100,000	13,840,000	11,648,290	84.16
மாற்றங்கள்	0	0	0	
1501 நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் (COVID-19)	0	22,000,000	18,361,600	83.46
1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	650,000	650,000	202,209	31.11
முழு மொத்தம்	**284,500,000**	**304,000,000**	**280,274,921**	**92.20**
மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்				
2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	6,750,000	6,750,000	4,656,826	68.99
2002 - பொறி, இயந்திரம், உபகரணம்	800,000	800,000	0	0
2003 - வாகனங்கள்	4,100,000	4,100,000	1,162,573	28.36
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	0	0	0	
2102 - தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்	4,500,000	8,300,000	6,298,080	75.88
2103 - பொறி, இயந்திரம், உபகரணம்	2,000,000	700,000	700,000	100.00
2104 - கட்டிடங்களும், கட்டமைப்புக்களும்	85,000,000	85,000,000	39,798,039	46.82
மனித வள அபிவிருத்தி	0	0	0	
2401 - பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	1,350,000	1,350,000	628,893	46.58
மொத்தம்	**104,500,000**	**107,000,000**	**53,244,411**	**49.76**
முழு மொத்தம்	**389,000,000**	**411,000,000**	**333,519,332**	**81.15**

3.7. நி.தி குறிப்பு 208 பிரகாரம் மாவட்டச் செயலக செலவினத்திற்கான ஒதுக்கீடு

தொ. இல	தலைப்பு	ஆமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவீனம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டு பயன்பாடு
				அசல்	இறுதி		
1.	101	புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	பௌத்த விகாரைகள் புனரமைப்பு மற்றும் வெசாக் நிகழ்விற்கான செலவுகள்	2,500,000	2,500,000	2,391,711	95.67
2.	110	நீதி அமைச்சு	மத்தியஸ்தர் சபைக்கான கொடுப்பனவு மற்றும் பயிற்சி நிகழ்வுகள்	3,206,700	3,206,700	1,796,023	56.01
3.	111	சுகாதார அமைச்சு	முதியோர் கொடுப்பனவு, மடு தேவாலய நீர் சுத்திகரிப்பு இயந்திரத்திற்கான மின்சாரக் கட்டணம்	69,678,500	69,678,500	61,962,600	88.93
4.	116	வர்த்தக அமைச்சு	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	677,490	677,490	551,204	81.36
5.	118	விவசாய அமைச்சு	கணணிகள் கொள்வனவு, பயிற்சி நிகழ்வுகள், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	5,622,415	5,622,415	4,000,895	71.16
6.	122	காணி அமைச்சு	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	605,737	605,737	605,553	99.97
7.	130	அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	பாடசாலை நூலக அபிவிருத்தி, மும்மொழி பெயர் பலகைகள் அமைத்தல், பட்டதாரி பயிலுநர்களுக்காக பொடுப்பனவு. சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	84,597,186	84,597,186	79,144,371	93.55
8.	160	சுற்றாடல் அமைச்சு	"சுரகிமு கங்கா" நிகழ்ச்சித்திட்டம், அபிவிருத்தி அலுவலருக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	540,480	540,480	508,125	94.01
9.	186	தொழில்நுட்ப அமைச்சு	தேசிய அடையாள அட்டை பிரிவிற்கான வளி சீராக்கி கொள்வனவு மற்றும் மின்கட்டணங்களுக்கான செலவுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கான சம்பளமும் ஏனைய நடைமுறை செலவுகளும்	4,433,222	4,433,222	3,949,673	89.09
10.	193	தொழில் அமைச்சு	உற்பத்தி திறன் அலுவலர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகள்	186,000	186,000	172,450	92.72
11.	194	இளைஞர் சேவை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு	வலைப்பந்து மைதானம் அமைத்தல், தளபாடங்கள் மற்றும் அச்சுப்பொறிகள் கொள்வனவு, இளைஞர் வலுவூட்டல் திட்டம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	9,150,590	9,150,590	8,169,013	89.27

12.	**198**	நீர்ப்பாசன அமைச்சு	வாகன திருத்தம் மற்றும் மீண்டெழும் செலவுகள்.	1,088,846	1,088,846	574,490	52.76
13.	**201**	பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்	தஹம் பசல ஆசிரியர் கொடுப்பனவுகள்	10,000	10,000	10,000	100.00
14.	**202**	முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்	பள்ளிவாசல்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	330,000	330,000	329,998	99.99
15.	**203**	கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்	மடு தேவாலய உள்ளக வீதி மேம்பாட்டு வேலைகளுக்கான கையிருப்பு சிட்டைகளுக்கான கொடுப்பனவுகள், முள்ளிக்குளம் ஆலய புனரமைப்பு வேலைகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	22,504,000	22,504,000	21,631,746	96.12
16.	**206**	கலாசார அலுவல்கள் திணைக்களம்	தேசிய இலக்கிய விழா, அனைத்துமத விழாக்கள், டொலஸ்மஹே பஹன, கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	812,500	812,500	660,329	81.27
17.	**210**	அரசாங்க தகவல் திணைக்களம்	தளபாடங்கள் கொள்வனவு, வளிசீராக்கி கொள்வனவு மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	382,342	382,342	345,931	90.48
18.	**216**	சமூக சேவைகள் திணைக்களம்	சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் மற்றும் சமூகம் சார் புனர்வாழ்வளிப்பு செயற்றிட்டம்	3,996,385	3,996,385	3,959,074	99.07
19.	**217**	நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்	இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவு, மருத்துவ கொடுப்பனவுகள், காகிதாதி,போக்குவரத்து மற்றும் கூட்டங்களுக்கான செலவுகள்	436,050	436,050	337,604	77.42
20.	**219**	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்	கணணி கொள்வனவு, பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள், புத்தாண்டு விளையாட்டுப் போட்டி மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	565,365	565,365	267,922	47.39
21.	**227**	ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	5,276,230	5,276,230	4,569,370	86.60
22.	**237**	தேசிய திட்டமிடல் திணைக்களம்	பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டுத்திட்டம், சபிரிகமக், உலக உணவுத்திட்டம்	72,823,258	72,823,258	55,350,928	76.01
23.	**243**	அபிவிருத்தி நிதித் திணைக்களம்	அரச தானிய களஞ்சிய சாலைக்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள்	20,767,645	20,767,645	12,812,652	61.70

24.	**248**	மதுவரி திணைக்களம்	மதுவரித்திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலக திருத்த வேலை	71,000	71,000	70,319	99.04
25.	**252**	தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்	குடிசன வீட்டுவசதி தொகை மதிப்பு மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	941,750	941,750	689,392	73.20
26.	**253**	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வூதியம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	20,749,977	20,749,977	16,254,779	78.34
27.	**254**	பதிவாளர் நாயக திணைக்களம்	பதிவாளர் படிகள்	452,850	452,850	446,125	98.51
28.	**284**	வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்	வனஜீவராசிகளின் தாக்கத்திற்கான இழப்பீடுகள்	1,735,500	1,735,500	754,000	43.45
29.	**286**	காணி ஆணையாளர் நாயக திணைக்களம்	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	630,430	630,430	630,430	100.00
30.	**290**	கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம்	கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலக புனரமைப்பு வேலை	65,000	65,000	00	0.00
31.	**307**	மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்	தளபாடங்கள், உபகரணங்கள் கொள்வனவு மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	1,384,000	1,384,000	546,301	39.47
32.	**326**	சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்	காகிதாதிகள்	7,500	7,500	5,996	79.95
33.	**327**	காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான நேர்முகத்தேர்விற்கான செலவுகள், கிராம மட்டத்திலான காணிபயன்பாட்டுத்திட்டம், மண் மற்றும் நீர் பாதுகாப்பு திட்டம், தளாபாடங்கள் கொள்வனவு மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	1,574,900	1,574,900	1,412,862	89.71
34.	**328**	மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம்	தொழில்சார் விழிப்புணர்வு நிகழ்சிகள், ஸ்மார்ட் சிறீலங்கா கட்டட அபிவிருத்தி வேலைகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	1,033,145	1,033,145	696,155	67.38
35.	**334**	பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம்	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	17,394,303	17,394,303	16,397,319	94.27

36.	**401**	தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு	கிராமிய கலையில் உள்ளூர் கலை வட்டங்களை மேம்படுத்துவதற்காக கலை வட்டங்களை அடையாளம் கண்டு பராமரிக்கும் நிகழ்சி	44,910	44,910	00	0.00
37.	**402**	கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டுமான அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	பாடசாலை விளையாட்டு உட்கட்டுமான அபிவிருத்தி திட்டம் - மன்/முருங்கன் மகா வித்தியாலயம்	4,832,708	4,832,708	2,641,575	54.66
38.	**403**	மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, கல்விச்சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு	கர்ப்பினித்தாய்மார்களுக்கான போசாக்கு குரு அபிமானி, பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான எதவிகள், பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சிகள், பெண்தொழில் முனைவோருக்கான உதவிகள், திரிய மென்பெத் நிகழ்சி, சிறுவர் கழக கூட்ட செலவுகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	48,877,200	48,877,200	41,119,427	84.13
39.	**407**	பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பளிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	பின்தங்கிய கிராம மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் - உழுந்து மற்றும் பயறு செய்கை	4,000,000	4,000,000	00	0.00
40.	**408**	பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	ஒரு கிராம அலுவலர் பிரிவில் ஒரு தொழில் முயற்சியாளரை உருவாக்கும் திட்டம், பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் கிராம அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விதாதா நிகழ்ச்சித்திட்ட செலவுகள்	26,024,362	26,024,362	10,421,201	40.04
41.	**409**	உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு	வரட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம், அனர்த்த குறைப்பு திட்டம், அனர்த பாதுகாப்பு நிலையங்கள் புனரைமப்பு வேலைகள், அவசரகால நடவடிக்கைகள், சுற்றுலா விடுதிகளுக்கான பராமரிப்பு செலவுகள், மாவட்ட செயலக மூலதன செலவுகள், சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்.	134,091,360	134,091,360	107,544,554	80.20
42.	**412**	வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	3,493,300	3,493,300	3,227,786	92.40
43.	**414**	சமுர்த்தி, வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.	சௌபாக்யா திட்டம், 200,000 சமுர்தி பயனாளிகளுக்கான பதிவிட பொருளாதார வலுவூட்டல் திட்டம், தனிப்பெற்றோருக்கான அபிவிருத்தி திட்டம், விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு, சிறுநீரகம் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவு சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்.	226,251,909	226,251,909	197,787,820	87.42

44.	**415**	கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	மீள்குடியேற்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் திட்டம், உட்கட்டுமான அபிவிருத்தி திட்டம், வீட்டுத்திட்டம், நாடுதிரும்பிய அகதிகளுக்கான மீள்குடியேற்ற உதவிகள்.	287,873,678	287,873,678	149,399,042	51.90
45.	**416**	சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	393,810	393,810	386,028	98.02
46.	**421**	திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு	பன்னவெட்டுவான் தொழில்நுட்ப கல்லூரிக்கான மலசலகூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை அமைத்தல் வேலைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	14,411,500	14,411,500	79,955	0.55
47.	**422**	தம்ப பள்ளிகள், பிரிவேனாக்கள், மற்றும் பிக்கு கல்வி இராஜாங்க அமைச்சு	மன்னார் புதுக்குடியிருப்பு சலமியா அரபிக் கல்லூரி மேம்படுத்தல் வேலைகள்	200,000	200,000	00	0.00
48.	**425**	நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு.	கெகுளுதரு உதான திட்டம், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	2,110,010	2,110,010	1,716,070	81.33
49.	**430**	காணி நிர்வாகம் மற்றும் அரச நிறுவனங்களின் நிலம் மற்றும் சொத்து அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	அரச காணி ஆவணங்கள் வழங்கள் தொடர்பான ஊக்குவிப்பு கொடுப்பனவு	514,500	514,500	465,684	90.51
மொத்தம்				**1,109,350,543**	**1,109,350,543**	**816,794,482**	**73.63**

3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை.

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2021 திகதிய சுற்றாய்வுச்சபை அறிக்கை படி மீதி	31.12.2021 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	ஏதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	ஆறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	534,967,146	534,967,146	-	-
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	194,312,393	194,312,393	-	-
9153	காணி	29,870,000	29,870,000	-	-
9154	அருவமான சொத்துக்கள்	0	0	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	0	0	-	-
9160	நடைபெறும் பணிகள்	96,414,035	96,414,035	-	-
9180	குத்தகை சொத்துக்கள்	0	0	-	-
மொத்தம்		**855,563,574**	**855,563,574**	-	-

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. My No. KVM/C/DS/MN/02/21 உமது இல. Your No. திகதி Date 22 ஜூன் 2022

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
மன்னார்

மன்னார்மாவட்டச் செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

மேற்கூறப்பட்ட அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ரி.பி.எம்.குமாரசாயக
சிரேஷ்ட உதவிக்கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

பிரதிகள் :-

1. பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.
2. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 agm@auditorgeneral.gov.lk www.naoil.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. My No. KVM/C/DS/MN/02/21 உமது இல. Your No. திகதி Date 31 ஒக்டோபர் 2022

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
மன்னார்

மன்னார்மாவட்டச் செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசியகணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மொழிப்பு அறிக்கை

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்புரியுள்ள அபிப்பிராயம்**

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 25 agdlocal@oagmail.gov.lk www.naod.gov.lk

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்புடியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து,இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழைக் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தவேண்டியதுடன் அம் முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிழ் கூற்று உருவாதும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காணிப்பிரச்சினை அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) உப பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ)முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பந்திக்கான தொடர்பு	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை
2.2	இனங்காணப்படாத 49 காசோலைகள் விசாரணை வேண்டும். ரூபா 1,371,155	மேற்கொள்ளப்படல்

3.1.3 (அ)	நீண்டகாலம் இடம் பெயர்ந்த சிங்கள முஸ்லீம் மக்களுக்கான உட்கட்டமைப்பு வேலைத்தளத்தின் கீழ் அமைக்கப்பட்ட முன்பள்ளி கட்டடத்தின் கானியின் உரிமமாற்றம்.	உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
3.1.3 (ஆ)	பூர்த்தி செய்யப்படாத கொறலி மோட்டை வீதி அமைத்தல் வேலைத்திட்டம்	ஒப்பந்தத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
3.3	ரூபா 151,600,000 பெறுமதியில் அமைக்கப்பட்ட 208 வீடுகள் பாவனையில் எடுபடுத்தப்படாமை.	உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

.....

1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

.....

1.6.1.1 மீண்டெழும் செலவீனம்

.....

மாவட்ட செயலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்குரிய திறைசேரியின் மொத்த செலவின அறிக்கை SA 10 இன் பிரகாரம் மொத்த மீண்டெழும் செலவீனம் ரூபா 280,274,921 ஆகவும் நிதிச் செயலாற்றல் கூற்றில் (ACA F) குறிப்பிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவீனம் ரூபா 280,030,151 ஆகவும் காட்டப்பட்டதால் மொத்த மீண்டெழும் செலவீனத்தில் ரூபா 244,770 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.1.2 மூலதன செலவீனம்

.....

மாவட்ட செயலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்குரிய திறைசேரியின் மொத்த செலவின அறிக்கை SA 10 இன் பிரகாரம் மொத்த மூலதன செலவீனம் ரூபா 53,244,411 ஆகவும் நிதிச் செயலாற்றல் கூற்றில் (ACA F) குறிப்பிடப்பட்ட மொத்த மூலதன

செலவீனம் ரூபா 53,489,181 ஆகவும் காட்டப்பட்டதால் மொத்த மூலதன செலவீனத்தில் ரூபா 244,770 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.2 நிதி நிலமை தொடர்பான கூற்று

.....

1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்

.....

(அ) மீளாய்வண்டில் மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலுக்குமாக செலவு செய்யப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 5,819,399 நிதியல்லாத சொத்துக்களாக காட்டப்படாமையினால் மீளாய்வண்டிற்குரிய நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,819,399 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மன்னார் மாவட்ட செயலகத்தின் 2625 சதுர அடியை கொண்ட பின்வரும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கு கொண்டுவரப்படாமையால் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

.....

2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

.....

மீளாய்வாண்டில் ஆறு மூலதன செலவின விடயங்களுக்கு திட்டமிடப்பட்டதன் பிரகாரம் திறைசேரியால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் கூட்டு மொத்தம் ரூபா 53,744,588 பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டினை பயன்படுத்துவற்கு முடியாமல் போனமை அவதானிக்கப்பட்டிருந்தது.

2.2 செலவின முகாமைத்துவம்

.....

அ. மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் 21 எண்ணிக்கையான செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பில் ரூபா 72,757,322 ஆனது ஆறு சதவீதம் தொடக்கம் நூறு சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது.

ஆ. ஏழு செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா 94,500,000 இல் பதினொரு சதவீதமான தொகை ரூபா 10,410,000 உரிய செலவின விடயத்திற்காக

பயன்படுத்தப்படாமல் வகைமாற்றத்தின் ஊடாக ஏட்டு எண்ணிக்கையான வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தமையானது பாதீட்டினை வினைத்திறனான முறையில் தயாரிக்காமையை வெளிப்படுத்துகின்றது.

இ. ஆறு செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா 17,000,000 உரிய செலவின விடயத்திற்கு போதியதாக காணப்படாமையினால் 38 சதவீதத்திற்கு மேற்பட்ட ஏழு செலவின விடயங்களின் மொத்தம் ரூபா 6,540,000 வகைமாற்றத்தின் ஊடாக பெறப்பட்டிருந்தன.

ஈ. 1501 செலவின விடயத்திற்கு குறை நிரப்பு பிரேரணை மூலம் ரூபா 22,000,000 பெறப்பட்டிருந்தது. எனினும் இவ் செலவின விடயத்தில் ரூபா 3,638,400 செலவிடப்பட்டிருந்தது. இது மொத்த குறை நிரப்பு ஒதுக்கீட்டில் 17% ஆக காட்டப்பட்டிருந்தது.

உ. மாவட்ட செயலகத்தில் வகை மாற்றத்தின் மூலம் 05 செலவின விடயங்களுக்கு கூட்டு மொத்தம் ரூபா 5,780,000 வேறு செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. எனினும் இவ் செலவின விடயங்களில் மொத்த தேறிய ஒதுக்கீட்டில் கூட்டு மொத்தம் ரூபா 5,911,492 ஆனது 06 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது.

2.3 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

.....

மீளாய்வாண்டின் திசெம்பர் மாத்தில் கையிலுள்ள பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 458,555,008 தொகையான கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும் ரூபா 232,072,500 கட்டுநிதி மாத்திரம் கிடைத்திருந்தது. இதனால் கோரப்பட்ட கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கு இடையே வேறுபாடு ரூபா 226,482,508 ஆக இருந்தது. எனவே ஆண்டிறுதியில் கையிலுள்ள பட்டியல்களுக்காக ரூபா 226,482,508 கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

.....

(அ) 2021 ஆம் ஆண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களால் 43 மூலதன செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 9 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டு மொத்தம் ரூபா 110,113,823 சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களினால் 14 மூலதன செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாமல் கூட்டு மொத்தம் ரூபா 21,681,260 சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) i) மாவட்ட செயலகத்தினால் ஜெனரேட்டர் கொள்வனவு செய்வதற்காக தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் ரூபா 7,500,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மாவட்ட செயலகத்தினால் இவ் ஒதுக்கீட்டினை ஜெனரேட்டர் அறை மற்றும் கேபில் போன்றவற்றிற்கு லங்கா அசோக் லேலன் பி.எல்.சி நிறுவனத்துடன் கூட்டு மொத்தம் ரூபா 7,450,000 இற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெறுமதி சேர் வரியுடன் சேர்த்து பார்க்கும் போது ரூபா 8,046,000 ஆக காணப்படுகின்றது. எனவே ஒதுக்கீட்டினை மீறி ரூபா 596,000 மேலதிகமாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும் ஜெனரேட்டர் கொள்வனவுப் பெறுமதிக்காக மட்டும் ரூபா 7,236,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மிகுதி ஆண்டிறுதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

ii) மாவட்ட செயலகத்தின் மின் பிறப்பாக்கி கொள்வனவு மற்றும் நிறுவுதல் தொடர்பாக வழங்குனரால் மின் பிறப்பாக்கி அறை மற்றும் மின் பிறப்பாக்கி வயரிங் என்பனவற்றிற்கு விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மேலதிக செலவாகிய ரூபா 759,353 பெறுகை நடைமுறை மற்றும் ஒப்பந்தத்திற்கு முரணாக அனுமதிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

iii) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட புதிய ஜெனரேட்டருக்காக 08.10.2021ல் 1483 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 7,236,000 செலுத்தப்பட்டிருந்த போதும் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்டதிற்கிணங்க Chartcd Electrical Engineer இன் இறுதி அறிக்கைகள் இதுவரை பெற்றுக் கொள்ளப்படாமை பிரதான பணிகளுக்கு முரணான ஓர் செயற்பாடாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.5 இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள்	பெறுமதி ரூபா	இணங்காமை
(01) பொது நிர்வாக சுற்றறிக்கை 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.1		மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 20 வாகனங்களுக்கு ஒரு வருடத்திற்கு மேலாக எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவில்லை.

2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) நீண்ட காலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள் குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2015 ஆம் ஆண்டு மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் விளாங்குளி கிராம அலுவலகர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டு திட்டம் தொடர்பாக ரூபா 500,000 படி இரண்டு பயனாளிகளுக்கு ரூபா 1,000,000 வழங்கப்பட்ட போதும் வீடுகள் பூரணமாக நிர்மாணிக்கப்படாததுடன் அவர்கள் அங்கு வசிக்காமையால் இக் கொடுப்பனவானது வீண்விரயமான கொடுப்பனவாகும்.

(ஆ) 2017ம் ஆண்டில் மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட சிரேஷ்ட ஆண் அலுவலர்களுக்கான கூட்டுவிடுதி அமைத்தல் வேலைக்காக நிதி நிர்மானதாரரால் செய்யப்பட்ட வேலைக்காக ரூபா 19,837,558 செலுத்தப்பட வேண்டியிருந்த போதும் ரூபா 20,027,118 செலுத்தப்பட்டமையால் மேலதிக கொடுப்பனவாக ரூபா 189,560 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான பெறுமதி சேர் வரி ரூபா 28,434 ம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

2.7 முற்பணக் கணக்கு மீதிகள்

தாபன விதிக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 7.8 இன் பிரகாரம் பதவி வரிதாக்கப்பட்ட, மரணித்த மற்றும் பதவியினை விட்டுச் சென்றிருந்த ஐந்து அலுவலர்களின் பதவியினர் கடன் நிலுவைகளின் மொத்தம் ரூபா 426,263 இனை 01 ஆண்டுக்கு மேலாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2.8 வைப்பு கணக்கு மீதிகள்

(அ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 11,388,377 பெறுமதியான 351 பிடிபண வைப்புக்கள் நிதி ஒழுங்குவிதி 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) திறைசேரி இறுதி கணக்கு கூற்றின் பிரகாரம் காட்டப்பட்ட மீதிக்கும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வைப்புக்கணக்குகள் தொடர்பான அறிக்கையில் உள்ள மீதிக்கும் இடையே இரு வைப்புக் கணக்கு இலக்க மீதிகளின் மொத்தம் ரூபா 5,375 ஆல் வேறுபட்டு காணப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பெறுகைகள்

2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் 265-1-1-0-2104 மூலதன தலைப்பின் கீழ் தொழினுட்ப பூங்கா, வாகன தரிப்பிடம் மற்றும் ஒன்றுகூடல் மண்டபம் – Phase 04 நிர்மான வேலைக்காக ரூபா 50,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் இம் மூலதன வேலைத்திட்டம் தொடர்பாடல் பெறுகை வழிகாட்டியின் 4.2.1 இல் கூறப்பட்டதிற்கிணங்க விபரமான பெறுகைச் செயற்பாட்டுத் திட்டம் (Details Procururement Plan) தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பெறுகை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம் பெறுகைக்கான அட்டவணையும் (Procururement time Schedule) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 நட்டங்களும் சேதங்களும்

.....

(அ) மீனாய்வாண்டில் இடம் பெற்ற இரு வாகன விபத்துக்கள் தொடர்பில் ஏற்பட்ட இழப்புக்கள் கூட்டு மொத்தம் ரூபா 1,565,125 தொடர்பில் நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பு I இல் வெளிப்படுத்தப்பட்டிருக்காமையுடன் நிதிப்பிரமாணம் 104(1) இன் படி விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்னார் மாவட்ட செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தொழிலுட்ப பூங்கா, வாகன தரிப்பிடம் மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்திற்கான கீழ் தளத்தில் முறையான திட்டமிடலின்மையால் 2020ம் ஆண்டில் கட்டப்பட்டிருந்த சுவர் மற்றும் யன்னல் என்பவற்றினை அகற்றி 2021ம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட சுவர் வேலையால் சென்ற ஆண்டு ஏற்பட்ட மொத்த செலவாகிய ரூபா 250,220 ஓர் இனங்காணப்பட்ட நட்டமாகும்.

3.3 சொத்து முகாமைத்துவம்

.....

மாவட்ட செயலகத்தின் மூன்று வாகனங்கள், உழவியந்திரம், உழவியந்திரப்பெட்டி மற்றும் 12 மோட்டார் சைக்கிள்கள் நீண்ட காலமாக பயன்படுத்தாமல் காணப்படுவதுடன் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவற்றினை இறுதியாக பாவனையில் ஈடுபடுத்திய ஆண்டு, திகதி போன்ற விடயங்களை கணக்காய்வில் அறிந்து கொள்ள முடியவில்லை.

3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

.....

2018ம் ஆண்டிலிருந்து மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் தொழிலுட்ப பூங்கா, வாகன தரிப்பிடம் மற்றும் ஒன்றுகூடல் மண்டப நிர்மாணத்திற்காக இவ்வறிக்கை திகதி வரை ரூபா 72,565,061 செலுத்தப்பட்டிருந்த போதும் கீழ்க்குறிப்பிட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

i. மேற்குறிப்பிட்ட வேலைக்கான மொத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
ii. நகர அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்திற்கமைவாக அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.
iii. Architectural Drawings and Stuctural Drawings

4. மனிதவள முகாமைத்துவம்

.....

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 667 ஆக காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதியில் 162 ஆளணி வெற்றிடங்கள் காணப்பட்டது.

ரீ.பீ.எம்.குமாரயக
சிரேஷ்ட உதவிக்கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

4. அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

குறிப்பீட்டு சுட்டிகள்	ஏதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100%-90%	**75%-89%**	**50%-74%**
காணி அனுமதிப்பத்திரம் வழங்குதல்	-	-	-
பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவுச் சான்றிதழ் வழங்குதல்	-	78%	-
வாகன வருமானவரி பத்திரம் வழங்குதல்	93%	-	-
தேசிய அடையாள அட்டைகள் வழங்குதல்	-	85%	-
